உ
சிவமயம்

# வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை



ஆக்கியோன் :

ா. கதிரவேலு

வெளியீடு :

திரமலை', ஊரெழு
(இலங்கை)

19-12-1986

1284
JPL
C1284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஊரெழு

# வீரகத்தி விநாயகர்

# போற்றி மணிமாலை

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

ஆக்கியோன் :
சபா. கதிரவேலு

83491
KOHA-JPL
1284 c.c

அக்ஷயஇல மார்கழி நான்காம் நாள்

1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
83491 c.c

## சமர்ப்பணம்

கடைச்சுவாமிகளில் இருந்து
பாரதியின் ஞான குருவான
யாழ்ப்பாணத்துச் சுவாமிகள்
ஊடாக வழிவந்த
சித்தர் பரம்பரையில்,
நம்மோடு சமகாலத்தில்
ஒட்டி உறவாடியும்
உறவாடாமலும்
வாழ்ந்தவரான
என் ஞானகுரு
தவத்திரு
கந்தைய
சுவாமிகள்
(குடைச்சாமி)
அவர்களுக்கே.

சேர்வு எண் 294.54 கதிர
அழைப்பெண்

ஆக்கியோன்: சபா. கதிரவேலு, T. T. I., B. A.
பதிப்பாசிரியர்: கதிர். வளவன், B. SC. (Eng.)
வெளியீடு: 'கதிரமலை', ஊரெழு, சுன்னாகம்.
முதற்பதிவு: 19-12-86.
அச்சுப்பதிவு: திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
உரிமை: ஆக்கியோனுக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன் குரல்

அறிவே வடிவான இறைவன் — அருவப்பிரமாணமாகிய இறைவன், அடியார்க்கு அருள் புரிவதற்காக எழுந்தருளி யுள்ள இடமே ஆலயம். இறைவன் இலனேல் உலகமும் உலக நுகர்ச்சியும் இல்லையாம். இறைவன் தனக்கெனக் கொள்ளும் உருவம் பயன் என்பன இன்றி, ஏனையவற் றிற்கு உருவமும் பயனும் அன்ன பிறவும் வழங்கி வருபவன்.

ஆனந்த வடிவனாகிய இறைவன் தன் உருவப் பிரமா ணத்தை ஊரெழுவிலும் உணர்த்தியுள்ளான். கல்லிலே கடவுளைக் கண்டு, கருணையும் பெற்றுய்ந்த செந்தமிழ்ச் செல்வங்களைக் காக்கவே இறைவன் தன் உருவப் பிரமா ணத்தை இங்கு உணர்த்தியுள்ளார். நாம் அவரை ஐம்புலன் களாலும் அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்கள்.

இறைவனைப் பிள்ளையாராக வணங்கும் மரபு பழமை யானது. பிள்ளைப்பருவம் அழகானதும், அப்பழுக்கற்றதும், கள்ளங் கபடமில்லாததும், கவர்ச்சியுடையதுமாகும். சிவ வழிபாட்டை ஏற்காத சமயங்களும் பிள்ளையாரை வழிபடு கின்றன. இது பிள்ளைக்கு உள்ள மகத்துவம். பிள்ளையார் ஊரெழுவில் வீரகத்திப் பிள்ளையாராக எழுந்தருளியுள்ளார்.

ஈரைந்து முடியானின் சங்காரத்தைத் தொடர்ந்து சீதை சிறைமீட்கப்பட்டு, அவளின் கற்பின் திண்மை உறுதிப்படுத்தப்பட்டதாயினும், இராமபிரானைப் பிரமஹத்தி தோஷம் பிடித்துக்கொண்டது. வீரகத்தி விநாயகரை வணங்கியே தோஷம் நீங்கியதாகக் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்பேசும் இன்னுமோர் செவிவழிக் கதையுமுண்டு. இராமமுனியோர் இராவண வதத்துக்காக இலங்கை வந்த போது, வழியிற் தாகசாந்தி செய்வதற்காக முதலில் அமைக் கப்பட்ட 'நிலாவரை' வற்ரு நீரூற்றை வானரப்படை அசுத் தம் செய்தமையால், ஊரெழுவில் பொக்கணை என்ற நீரூற்று அமைக்கப்பட்டுத் தாகசாந்தி செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டதாம். பொக்கணைக் கல்லொன்றில் பதிவுபெற்றிருந்த பாதம் போன்ற அடையாளம் ஒன்றை யாம் பார்த்துள் ளோம். அவ்விலச்சினை இராமரடி என அழைக்கப்பட்டதை யும் யாம் அறிவோம். இதே பொக்கணையில் தீர்த்தமாட விநாயகர் எழுந்தருளிய திருக்கோலத்தையும் யாம் கண்டு களித்துள்ளோம். தொடர்புகள் எவ்வாருே? யாமறியோம்.

ஊரெழுப் பிள்ளையார் கோயிலுக்குத் தெற்குப்பக்கமாக வுள்ளது அடியேன் பிறந்த "கதிரமலை". பிள்ளையாருக் கும் வீட்டுக்குமிடையில் பூசுரர் கார்த்திகேசையர் இல்லம். மணி கேட்டதும் கோயிலுக்கு ஓடும்படி கலைக்கப்படுவோம். பூசை முடிந்ததும் கார்த்திகேசையர், சம்புடத் திருநீற்றுடன் காட்சி அளிப்பார். விபூதியை உச்சியிலும் போட்டு, நெற்றி யிலே ஒரு பொட்டும் போட்டு விடுவார். வடக்கனம்மா, இருக்கிற தழிசைகளைப் பகிர்ந்து நிற்கிற பையன்களுடைய கையில் வைத்து விடுவார்.

எமது உள்ளத்தில் சிறுவயதிற் பற்றிக்கொண்ட சில எண்ணக் கருக்களின் வளர்ச்சியே இச் சிறு நூலாகும். விநாயகன் இந்த அளவிற்கு எமக்கு அருளமுதூட்டி வளர்த்து வைத்தானே என்பதிற் பரமதிருப்தி.

ஏகனும் அநேகனுமான இறைவன், எம்முள்ளத்தின் உள்ளே விநாயகராக நின்று இப்பணியில் நம்மை ஈடுபடுத்தி யுள்ளார். ஆரம்பித்து வைத்த அவரே நிறைவும் செய்து வைக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது வருடங்கள் பழமையான கருத்துக்கள் உருவம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர், எனது அன்பிற்குப் பாத்திரமானவரும், பெரும் மனிதப் பண்பாளருமான கரம்பொன் 'சாத்வீகம்' பண்டிதர் ச. குமரேசையா அவர்கள் பார்வை செய்து, திருத்தங்கள் சொல்லி, அச்சிட அனுமதி வழங்கியவரும் அவர்களே.

ஒரே ஊரவராய், ஒரே பாடசாலை ஆசிரியராய், ஒரே தொழிற்சங்கத்தில் எதிரும் புதிருமான உறுப்பினராய், நல்ல பகுத்தறிவு நண்பனுன கவிஞர் முருகவே. பரமநாதன் (ஆழ்கடலான்) அவர்களே இத்துறையில் எப்பொழுதும் எனக்கு ஊக்கம் தருபவர்கள். இந்நூலுக்கு மதிப்புரை வழங்கி இருப்பவர்களும் அவர்களே.

ஓதி உணர்ந்த, கலைமாச் செல்வர், பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை செய்ய ஆனைமுகன் அருள்பாலித்துள்ளமை நாம் செய்த தவப்பயன். இவ்வறிஞர்கள் யாவருக்கும் அடியேனின் பணிவான வணக்கமும், அன்பான நன்றியுமாகும். அழகாக அச்சிட்டு உதவிய திருமகள் அழுத்தகத்தாருக்கும் எம் நன்றி.

ஔவை சொன்ன வழியிலேனும், ஆய்ந்தறிந்தார் அனுபவரீதியில் காட்டிய வழியிலேனும், யாம் எல்லோருமே வாழ வீரகத்தி விநாயகன் திருவருள் பாலிப்பாராக.

நன்றி.

ஓம் சாந்தி! சாந்தி!!

"கதிரமலை"
ஊரெழு,
இலங்கை,
19-12-86.

சபா. கதிரவேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர்
**கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்**
B. A. (Hons.), Ph. D. (Edin)
வழங்கியது

கோயில்கள் இருந்த இடங்களையும், குடிமனைகள் இருந்த இடங்களையும் இனங்காண முடியாதபடி அழிவுகளை அறனிலார் மேற்கொள்ளும் இவ்வேளையிலே, எங்கள் பிரதேசக் கோயில்கள் பற்றிய இலக்கியங்கள் நிறைந்த பயன் தரக் கூடியன. ஆசிரியர் திரு. சபா. கதிரவேலு அவர்கள் ஊரெழு வைச் சேர்ந்தவர். அப்பதியிலே எழுந்தருளியுள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் பேரில் திருவிருத்தம் பாடியவர். இவர் அங்கு அடியார்களுக்கு அருள் வழங்க வீற்றிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் பேரில் பாடிய 'போற்றி மணி மாலை' இப்பொழுது வெளிவருகின்றது.

இக்காலத்தில் பிரபந்தம் பாடும் எவரும் முற்காலப் புலவர்கள் கையாண்ட மொழிநடையை உபயோகிப்பதில்லை. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை பாடிய புலவரும் இதற்கு விதிவிலக்கல்லர். எளிமையான சொற்கள்; ஆனால் இறுக்கமான பாக்கள். பொருத்தமான கவிநயமுள்ள சொற்கள் தங்குதடையின்றி பொருள் வளமும் சந்தப் பெருக்கும் புலப்படத் தொடர் தொடராக வெளிவருகின்றன.

"ஆணிப்பொன் முத்தழகோ! அருங்கொன்றைப் பூவழகோ! அமுதேயன்ன பாணித்தேன் சுவையழகோ! பாவாணர் கவியழகோ!... " (பாடல் 5) என்று இழுமெனக் கவிப்பிரவாகம் செல்கின்றது.

புராணக் கதையினையும் ஊரெழு மண்மணத்துடன் பாடும் புலவர் திறனுக்கு,

"செம்பாட்டின் சீர்மையினாற் செழுமையுறு
செங்கதலிப் பாகி னோடே
அம்பலத்தான் உனக்களித்த அருள்ஞான
மாம்பழமும் அருளப் பெய்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடிகள் (பாடல் 8) சான்று பகருகின்றன. விநாயக ருடைய அருட் சிறப்புக்களையும், கோலச் சிறப்புக்களையும் தலச் சிறப்புக்களின் பின்னணியிலே புலவர் தரிசிக்கின்றார். ஊருக்காகவும் உலகுக்காகவும் தனக்காகவும் வீரகத்தி விநாயக னின் அருளை வேண்டி, உருக்கமுடன் பாடுகிறார். தலத்தி னுடைய தோற்றமும் வளர்ச்சியும் பொலிவும் பாக்களி னூடே தரிசிப்பார்க்குத் தரப்பட்டுள்ளன.

"பனையோலைக் கொட்டிலிலே பார்ப்பனனார்
வேதையர் படித்துப் பூசி
தினையரிசிப் புற்கையோடு தீங்கதலி
தேனூறத் தினம் படைத்து"

என்பது யாழ்ப்பாணக் கோயில் ஒவ்வொன்றினதின் எளிமை யான ஆரம்பத் தோற்றமாகும். "தீந்தமிழர் செய்தெய்வச் சிலையுடைத்தாரும், சித்திரத்தேரில் தீயைக் காந்தமெனக் கடிதெறிந்தாரும்" புலவர் மனக் கண்ணிலே தோன்றுகின் றனர். அவர்களும் "வீரகத்தி கழல்கள் போற்றின்" அபய கரம் பெறக்கூடியவர்களென, எண்ணும் ஆசிரியர் கொடு மைகள் தாங்கமுடியாத அடியார்களின் குரலாக "படை யோடு வந்துறுத்தும் பகைவரையே அழித்தொழித்துப் பரந்து காப்பாய்" என்று விண்ணப்பிக்கின்றார்.

எழுபத்தைந்து பாடல் மலர்கள் கொண்டு விக்கினங்கள் வாராமல் வினை தீர்க்கும் விநாயகனுக்கு அர்ச்சனை செய் கிறார் புலவர். இவற்றைப் படிப்பவர்கள் பயன் பெறுவார். பாடல் ஒவ்வொன்றும் அருளுணர்வூட்ட வல்லது. பத்திச் சுவையும் கவிச்சுவையும் சந்தச் சுவையும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன. இத்தகைய பாடல்கள் கொண்ட இந் நூலுக்கு அணிந்துரை வழங்க வாய்ப்புத் தந்த 'வீரகத்தி வளர் தாளனை' வேண்டி இந் நூற்புலவர் இன்னும் பல அருட்கவிகள் பாட அவ் 'வீரகத்தி மலர்த்தாள்' அருள் சுரக்க வேண்டுமென இறைஞ்சுகிறேன்.

தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
1986-12-09.

அ. சண்முகதாஸ்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்

# மதிப்புரை

ஹரி ஓம்

இடக்கரத்தில் பாசமொடு இனியதொரு
மோதகமும் ஒடித்தெ டுத்தே
விடப்பட்ட கொம்புடனே அங்குசமும்
வலக்கையில் வாதே செய்ய
தொடர்ந்தோடு முயிரினத்தார் தூமணியைத்
துதித்தாடித் தொடர்ந்தே பாட
இடர்தீர்க்க வீரகத்தி இரங்கிநீ
எழுந்தருளும் இணைத்தாள் போற்றி.

(மணிமாலை 29)

தனக்குமேற் தலைமை இல்லாதவன் ஒருவனே, அவனே இறைவன். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க'. இது மணிவார்த்தை. எந்த நாமத்தாலழைப்பினும் எத்தனை திருக்கோலங்களில் எழுந்தருளினும் சரி, ஒன்றே தெய்வம். சைவம் சிவசம்பந்தமானது. இறைவனுக்கே சைவன் என்ருெரு திருநாமம். சிவனின் வேருகாத தெய்வம் விநாயகர். எல்லாவற்றுக்கும் முந்தியவராக, மேலாக இருப்பவர் அவர். அவருக்கு மேல் இன்னெரு தலைவரில்லை. (தலைவர் — நாயகர்). அதனுல் விநாயகர் என்று பெயர். வி-என்பது உயர்ந்ததில் உயர்ந்ததாம் தன்மையைச் சுட்டும். தமக்கு மேற் தலைவர் இல்லாதவர் என்று பொருள். பெருமானின் பெயர்களு மனந்தம். பிள்ளையார் எல்லோருக்குஞ் சொந்தம். பிள்ளை யாருக்கு எல்லாருஞ் சொந்தம். எல்லாருக்கும் நல்லவர். எல்லாருக்கும் வேண்டியவர். உலகெங்கு மவர் கோயில் கொண்ட செய்திகளைச் சாசனங்கள் பேசுகின்றன. மஞ்சள் மாவிலும், புற்று மண்ணிலும், சாணியிலு மவரைப் பிடித்துப் பூசை பண்ணலாம். எங்கே, எப்போது, எவர் எப்படிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிட்டாலும் வந்து விடுவார். ஊரெழுவூர் மக்களின் குரல் கேட்டுச் சந்நியாசிப் புளி நீழலில் உட்கார்ந்தவர்தான் வீரகத்தி விநாயகர். கொட்டிலிலே தாலாட்டி கோபுரத்தி னுட் பொருளாயமைந்த பிள்ளையின்மேல் எழுந்த முதற் பிரபந்தமே இது.

இலக்கியத்தின் மேலான உருவம் — எண்ணத்தின் உச்ச வெளிப்பாட்டுக் கருவியே கவிதை. மனிதனின் மொழிப் புலமையின் விளைவே இலக்கியம். 'மிகச் சக்தி வாய்ந்த உணர்வுகள் இயல்பாகத் தோன்றிப் பிரவாகிப்பதே கவிதை' என்கிறார் ஆங்கிலக் கவிஞர் வேட்ஸ்வேர்த். இறைவன் அருளாமல் இருக்க முடியாமல் அருளுகிறான் புலவனும் பாடாமல் இருக்கமுடியாமற் பாடுகிறான். சிந்தித்து எழுத லாம், பேசலாம். உளம் நெகிழ்ந்தாற்றான் பாடலாம், படிக் லாம், பணியலாம். தனது மன நெகிழ்வால் மற்றவர்களை யும் நெகிழ வைப்பதென்பது என்ன இலகுவானதா? அப்படி மற்றவர்களின் கல்மனதையும், வாழைப்பழத்தின் மனங் கனிவித்துப் பாகாய் உருகி ஓடச் செய்யுந் திறமை கவிதைக் குண்டு என்றால், அந்தத் தனித்துவம் பக்தி இலக்கியங் களுக்கே சிறப்பானது. அறிவு பூர்வமான உலகியலுக்கு அப் பாலே பக்தியோடு குழைந்த உணர்வு பூர்வமான பாடல் களை எவரும் இலகுவிற் பாடிவிட முடியாது. பாடினாலும் வெறும்பாட்டு. அதைத் தெருப்பாட்டென்றார் வள்ளலார். அந்நெறியிலே கவியூற்றுப் பொங்கி வடிந்த வேளையில், நினையாமல் — எழுத்தெண்ணிப் பாடாமல் மலர்ந்த கவிதை கள் (வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலையில் 79) அமைந் துள்ளன. காப்பாக அமைந்த நாலும் வெண்பா. நூலா யமைந்த அறுபத்தொன்றும் கணேசனின் திருவடிப் புகழ்ச்சி கள் (விருத்தம்). காப்பாய் என இரப்பவை ஐந்து. போற்றி விருத்தம் மூன்று. இதுவரை எம்மறிவுக்கு எட்டியவரை காணாத பஞ்சமுக விநாயகர் துதி ஆறு. ஆக மொத்தம் 79 பாடல்களாயமைந்ததே இப்பிரபந்தம். இருக்குவேதம் பழமையானது. கவிதை வடிவிலமைந்தது. அங்கேகூடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசனைக் கவிகளிற் சிறந்தவர் என்ற பொருளமைதியோடு பேசப்படுகிறது. இவ்வாறு ஆதிமுதல் இத்தேதி வரைக்கும், அகஸ்தியர் — அவ்வையார் — கபிலர் — நம்பி உட்பட விக்கினேஸ்வரரைப் பாடியும் ஓச்சந்தீராத நிலையிலேதான் ஆசிரியர் தன் குலதெய்வத்தைக் கவி செய்துள்ளமை, இன்றைய கவிஞர் இணைத்துக்கோர் எடுத்துக்காட்டாகும்.

மனிதஇனம் தாம் வாழும் சூழலிலும், ஆற்றும் தொழிலிலுஞ், செயலிலும், எதிர்கொண்டு அனுபவிக்கும் இன்ப துன்பங்களிலும் — தம்மை வழிநடத்தும் தெய்வத்துடன் — சிறப்பாகத் தான் வணங்கும் தெய்வத்துடன் உறவு கொள்கிறது. இந்த உறவுமுறை மிகப் பாரம்பரியமானது; சைவ சமயத்தில். எனவே திருமுறைகளைப் பாடிப் பழகிய நா — எழுதிப் பழகிய கை — நினைத்துப் பழகிய நெஞ்சு — வணங்கிப் பழகிய உடம்பு — வலம் வந்த கால்கள் — காட்சியிலே லயித்த கண்கள், ஒருமித்த நிலையிலேதான் பாடல்கள் பம்பாநதி போற் பாய்கின்றது மட்டுமன்றி மண்ணின் வாசனையைப் பளிச்சிட்டும் காட்டுகின்றன.

ஆலயத்திலே ஒன்றித்த வேதையர் (19), கார்த்திகேசையர் (20), வடக்கனம்மா (24), சோமசுந்தரக் குருக்கள் (44) எல்லாருமங்கே நடமாடுகிறார்கள். சைவத்தமிழ் உலகம் போற்றும் உதயபானு சரவணமுத்துப் புலவர் (37), அவர்தம் ஆசானின் ஆசான் மயில்வாகனப் புலவர் (42), தக்க கல்விமான் சீ. முருகேசையர் (50) என்னும் நுண்மாண் நுழைபுலம் மிக்க பெரியார்களையும் தொட்டுக் காட்டிய ஆசிரியரின் மதிப்புப் போற்றத்தக்கது.

தடஸ்தம், சொரூப மென்னும் இருநிலைகளைப் பேசுகின்றன; சாஸ்திரங்கள், 'சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாகம்' என்பது வாசகம். எனவே எப்படி இருந்த போதும், சிறியோனாகிப் பெரியவனான இறைவனின் தோற்றப் பொலிவு சொல்லுகைக்கில்லாதது. சாஸ்திரங்கள் இறைவ

னுடைய திருவடியே சக்தி என்கின்றன. திருவடியை அடைவதே பிறப்பின் இறுதி இலக்கு. ''அடியார் பவரே அடியவ ராமால்'' என்பது திருமந்திரம். எனவே இறைவனுடைய அகண்ட பரிபூரண நிலையை எம்மாலளக்கவோ காணவோ முடியாத நிலை. தாயின் வடிவை எட்டமுடியாத குழந்தை தாள்களைப் பற்றிப் பிடிக்கிறது. தாய் வாரி, அள்ளி, எடுக்கி, அணைத்து இடுப்பிலே வைக்கிருள். தோள் மேலே வைத்தும் போற்றுவாள். அதேபோல் நமக்கு அண்மையிலுள்ள பகவானின் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்தாலவன் எங்கெழுந்தருளுவது; இவன் நம்மை விடானென்று எதிர்ப்படுகிருன். பக்தன் பரவசமடைகிருன். இந் நெறியிலேதான் சபா. கதிரவேலுவின் கவி கணேசனின் பாதகமலங்களை 61 தரம் போற்றியமைக்கு ஏதோ ஒரு அடிப்படையுண்டுபோலத் தொனிக்கிறது.

இப் பத்திப் பனுவலிலே கோவையான மணிகளிலிருந்து ஜாலடிக்கும் மனப்பாங்குகள் படிப்போருள்ளத்தைக் கொள்ளையடிக்கின்றன.

> ''எதிரே நின்று உருக்காட்டு, செம்பாட்டின் சீர்மையினுற் செழுமையுறு செங்கதலிப் பாகினேடே, பருவத்தால் முதிர்பச்சைப் பெருமாள் சேர் பாலரிசி, கார்த்திகேசர் சொரிந்த நறைப் பூச் சரமுஞ் சுடர், பண்ணதிலே பாவலர் தம் நாவினிலே, செந்தமிழால் உனைப் பாடச் சேர்வினைகள் களைந்தருளுஞ் செல்வா, என்புருகப் புகழ் பாடி, அன்பூறி அருள்வேண்டி, அழ விழுந்த கண்ணீரே அருவியாக, ஆணிப்பொன் முத்தழகோ, அருங் கொன்றைப் பூவழகோ, பக்தி பூக்கக் காணில் உன் கண்ணழகோ கரிமுகத்தினழகோ காட்சி காட்சி.''

இவ்வாறெல்லாம் அள்ளூறு தேனுய் அமைந்த கவிதைப் பகுதிகள் தேன் பிலிற்றிச் சிறக்கின்றனவன்ருே. கள்ளங் கபடமில்லாமல், தேறித் தெளிந்த நிலையில், உள்ளத்தைச் சொல்லும் இனிவரும் பாடலின் அருமை சொல்லுந்தரமன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாலியத்தில் பேதமையின் பரிதவிப்பால்
பிள்ளையார் பதமே நாடேம்
மாலிருண்ட காளையராய் மங்கையர்மேல்
விழிவைத்து மயங்கி நின்றோம்
வேலிரண்டு நெற்றியிலே விஞ்சியொரு
ஞானவிழி வீர கத்தி
காலிரண்டுஞ் சோரமுன்னே காட்டிடுதி
கண்முன்னே கழல்தாள் போற்றி!"
(வீ. போ. ம. மா. — 57)

இவ்வரிய பாமாலையில் வீரகத்திப்பிள்ளை ஆசிரியரை நெறிப்படுத்திய பாங்கை "எங்கேயேனும் வன்பக்கம் அறிந் தாயேல் வழிமறித்துத் திருப்புவாய் நீ" என்று நெஞ்சோடு நெஞ்சம் பேசுவதாகப் பேச வைத்திருக்கும் அங்கதமும் — பக்தியும் சொல்லுந்தரமன்று.

அடக்கமான இத்திவ்வியப் பிரபந்தம், ஒரு தல புராணத் தின் நிலையிலே வைத்து எண்ணப்படத்தக்க தென்பதைக் கற்றறிந்தார் கையிற் படும்போது தெரியும்.

எல்லாம் வல்ல கண்ணபிரானின் திருவடிகளை எண்ணி அவன் தன் மருகன் புகழ் பாடியது போல, தங்கச்சியின் புகழும் பாட மூத்த பிள்ளையே முன்வர வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

"ஒன்றி நீர்கள் வந்துரைமினோ நுமக்கிசையுமா
நினைந் தேத்துவீர்"

'சித்திராபதி',
ஊரெழு,
சுன்னாகம்.

"ஆழ்கடலான்"
அக்ஷய மார்கழி ஏழு
(22-12-87)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஊரெழு

# வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை

## காப்பு

### விநாயகர்

ஐந்து வயதுமுதல் ஆனைமுகா! நின்பதத்தில்
நைந்துருகி நின்றதெண்ணி நான்பாட—பைந்தமிழால்
ஊரெழுவில் ஊர்முகப்பில் உற்ற அரசடியில்
சீரெழும்சேய் தந்தருள்செஞ் சொல்.

### மனோன்மணி அம்பாள்

உன்னைத் தொழுதேத்தி உய்வழியைக் கண்டறிந்தேன்
அன்னை மனோன்மணியாம் அம்பிகையே—உன்னருளால்
வீரகத்தி ஐயாவை வேண்டிநிதம் நான்துதிக்க
பாரகத்தில் காக்கும் பதம்.

### மீனாட்சி அம்பாள்

பாவால் மணிமாலை பக்குவமாய்க் கோத்தெடுத்தே
நாவாலே மீனாட்சி நான்பரவ—ஏவாயோ
உன்னருளைப் பற்றிநின்றேன் ஓங்காரன் மேற்பாட
மன்னுமலை யான்பொன் மலர்.

### முருகன்

கந்தனுக்கு முன்பிறந்த காயாம்பூ மேனியான்
விந்தை விநாயகனும் வீரகத்தி—சிந்தைசேர்
செந்தமிழாற் பாடவே செவ்வேளே முன்னின்றே
அந்தமிலா அன்பை அளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

சீர்பூத்த ஊரெழுவில் செகம்போற்றும்
சிவநெறியாஞ் செழுமை யாலே
கார்பூத்துக் காப்பாற்றக் கருணைநெறி
களைகட்டிக் கனிந்தே ஓடி
ஏர்பூத்துக் குலுங்கிடவே எனையாண்டே
ஏத்தநிதம் எதிரே நின்று
ஊர்பூக்க வீரகத்தி உருக்காட்டு
விநாயகனே உன்தாள் போற்றி! 1

அருந்தமிழால் அவ்வைக்கே அருள்வழங்கி
ஆய்ந்தகன்ற அவளின் வாக்கைப்
பெருந்துணையாம் வீரகத்திப் பெருவயிறன்
உயர்ஞானப் பெருமை சேர
மருந்தாக எடுத்துரைத்து மாநிலமே
கருத்தூறி மயக்கந் தீர
இருந்தருளி ஊரெழுவில் இடங்கொண்டான்
இறைவாநின் இணைத்தாள் போற்றி! 2

பணிவுடனே கையெடுத்துப் பதமலரில்
சிரந்தாழ்த்திப் பதிகம் பாடி
அணிமலரால் அகங்குளிர அருள்பெறவே
அர்ச்சித்தே அழகாய் ஆடிப்
பணியிதுவாய் இணைவிழியைப் பாதாதி
கேசமதாய்ப் பதித்தே போற்றின்
பிணிதீர்த்தே ஆட்கொள்வான் பெருமானார்
வீரகத்திப் பொலன்தாள் போற்றி! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவமிலா இறைவனுக்கே உருக்கொடுத்தே
உலகுய்ய உய்ந்தார் அன்பர்
அருவமுமாய் அறிவுருவாய் ஐம்பூத
ஆக்கமதாய் அறியா ஞானி
ஒருவனுமாய் ஓங்கார ரூபனுமாய்
இருவருமாய் இகத்தி லெட்டாத்
திருவுருவாய்த் தித்திக்கும் தேனமுதே!
வீரகத்தி திருத்தாள் போற்றி! 4

ஆணிப்பொன் முத்தழகோ அருங்கொன்றைப்
பூவழகோ அமுதே யன்ன
பாணித்தேன் சுவையழகோ பாவாணர்
கவியழகோ பக்தி பூக்கக்
காணில்உன் கண்ணழகோ கரிமுகத்தின்
அருளழகோ காட்சி! காட்சி!!
மாணிக்கப் பிள்ளைதிரு மணந்திறப்பீர்
வீரகத்தி மலர்த்தாள் போற்றி! 5

பிடியுருவாய் உமையவளும் பேரின்பக்
களிறதுவாய்ப் பெருமா னும்மே
கடிதெனவே கருத்தொன்றிக் காதலெழப்
பிரணவமே எழுத்தி ரண்டாய்
வடிவுறவே வீரகத்தி வானவரின்
துயர்துடைக்க வடிவம் பெற்ருய்
இடியறவே இன்பவெள்ளப் படியேற்றி
இரங்கிடுவாய் இணைத்தாள் போற்றி! 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்தெழுந்தே மூவுலகைக் கலக்கியஅ
ரக்கனையே கணத்தில் வென்று
அனைத்துலகுங் காப்பாகி அமரர்சி
றைமீட்ட அரங்கன் ராமன்
உளையன்றே மனச்சிறையி னுள்ளடைக்க
வீரகத்தி உருவாய்ப் பக்தன்
தளைப்பிடித்த பிரமஹத்தி தணித்தாயே
அருள்பொழிதா மரைத்தாள் போற்றி! 7

செம்பாட்டின் சீர்மையினாற் செழுமையுறு
செங்கதலிப் பாகி னோடே
அம்பலத்தான் உனக்களித்த அருள்ஞான
மாம்பழமும் அருளப் பெய்து
உம்பருக்கே நிழலூட்டும் உயர்வருக்கைத்
தேனூற்றும் உடன்க லந்தே
எம்பரனே யாமளிக்க எமையாண்டாய்
வீரகத்தி எழில்தாள் போற்றி! 8

பருவத்தால் முதிர்பச்சைப் பெருமாள்சேர்
பாலரிசி குறுணி சேரக்
கருவத்தால் தலைதெறிக்கும் கன்னலது
கொழுஞ்சாறுங் கலந்து பெய்து
உருவத்தால் மரகதமாய் ஊர்மணக்க
வறுத்தபய றோடு சேரப்
பெருவிருப்பால் பொங்கலிட்டே போற்றுவரே
வீரகத்தி பொற்றாள் போற்றி! 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரூரும் ஊரெழுவில் சிவமூறி
அருண்மலரும் செழுமை காணப்
பேரூரின் நாப்பண்ணே பெருநிழலாய்
வீரகத்தி பொழித லாலே
காரூந்து வளங்கொழிக்கும் கஜமுகனே
கருத்தூறிக் கரமே கூப்பின்
ஆரூரின் அரன்மகனே! அடியேனை
ஆண்டளிப்பாய் அருட்தாள் போற்றி! 10

மன்னுபுகழ்க் கிழானை வளர் மனோன்மணியாள்
வலங்கொண்ட வாய்ப்பே வாழ
மின்னிடையாள் இந்திரானை மீனாட்சி
இடமிருந்தே ஈட்டங் காண
கன்னலிடைப் பால்கலந்த கனிரசமே
வீரகத்தி கனிந்த அன்பால்
சென்னிதனைத் தாள்வைக்கச் செருக்கறுக்கும்
சிவன்மகனே செந்தாள் போற்றி! 11

நெக்குருகிக் கரங்கூப்பி நினைவதனை
முகப்படுத்தி நெகிழ்ந்தே உள்ளம்
பக்குவமாய் வலம்வந்து பரகதியே
துணையென்று பரவி ஓதித்
திக்கெல்லாந் திரும்பாது திருவருளே
தெப்பமாய்நற் றியானஞ் செய்ய
விக்கினங்கள் தீர்த்தருள்வான் வீரகத்தி
விநாயகனே விறல்தாள் போற்றி! 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கார வினையழிய ஆதார
நெறியளித்தே அறனுங் காட்டி
பாங்கான பரலோக வாழ்விஞேடு
பழவினைகள் பரிந்தே தீர்த்து
நீங்காத பேரின்ப நீர்மைபெற
நித்தமுமே நினையே ஏத்தித்
தூங்கிலனே வீரகத்தித் தூமணியே
துயர்தீர்க்கும் துணைத்தாள் போற்றி! 13

அறிவூரா என்னுள்ளே அரணமைத்தே
ஆளுமர சடியின் நாதா!
நெறியெல்லாம் எமக்கருளி நின்னடிக்கே
யெனைஅழைத்து நினைவு காட்டிக்
குறிவைத்தாய் வீரகத்தி குமரனுக்கு
முன்பிறந்தாய் குஞ்ச ரத்தாய்
பிறிதறியேன் பேரின்பப் பேறளிக்க
வந்தவருட் பெருந்தாள் போற்றி! 14

அஞ்சுமலர்க் கொடுங்கணைக்கு அஞ்சியன்றே
ஆனைமுகன் அடியார் நாமே
நெஞ்சாரக் கைகூப்பி நெடும்வீதி
விழுந்துருண்டு நிற்கின் றேமே
வெஞ்சரத்தை விலக்கிடவே வீரகத்தி
அடிவிழுந்தேன் விளங்கு தெய்வக்
குஞ்சரத்தாய் உவந்தென்னைக் கூட்டிடுவாய்
குருவாயாட் கொளுந்தாள் போற்றி! 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவிதங் கடந்தொளிரும் ஐங்கரனே
ஆனைமுகா ! அமரர் காணுச்
சித்தான சற்பொருளின் செம்பொருளே
சிற்பரனே செவ்வியர் தாம்
முத்தான ஆயிரமாய் முழுநாமம்
ஏத்துவரேல் முறுவல் கூர
வித்தான அறிவுருவே வீரகத்தி
வினையறுப்பார் விரைதாள் போற்றி ! 16

அன்பொழுகத் தியானிக்கும் அடியாரை
அருள்செய்தே ஆண்டு கொள்ள
இன்பொழுகு பிரணவமாய் இடர்தீர்க்க
இயைந்தனையே இருவர் என்றும்
தன்பாகம் மூன்ருகத் தாரகமாய்
வீரகத்தி தளிர்த்த தாயே
உன்பாதம் தொழுதெழுந்தால் உவந்தேநாம்
தழைத்திடலாம் உன்தாள் போற்றி! 17

நந்திமுதல் தேவரெலாம் நண்ணுதற்கே
அரியவனுய் நாத விந்தாய்த்
தொந்திநிறை பொருள்பொதிந்த வேதமதாய்த்
தூயநெறித் தொகுதி காட்டி
விந்தைபுரி வீரகத்தி விநாயகனே
வினைதீர்த்தே விண்ணோர் வாழப்
புந்தியிலே நாமிருத்திப் பூசனைகள்
புரிந்திட்டோம் புகழ்த்தாள் போற்றி ! 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையோலைக் கொட்டிலிலே பார்ப்பனனூர்
வேதையர் படித்துப் பூசி
தினையரிசிப் புற்கையொடு தீங்கதலி
தேனூறத் தினம் படைத்து
மனையெல்லாம் மாண்பான மணியோசை
மண்டிடவே மானோர் நோக்கார்
வினையறுத்தே உய்ந்திடவே விரைந்திடுவர்
வீரகத்தி விறல்தாள் போற்றி! 19

கற்கண்டார் மோதகமும் கன்னலெனும்
வெண்சாதக் கட்டி யோடு
சொற்கொண்டல் கார்த்திகேசர் சொரிந்தநறைப்
பூச்சரமும் சுடர வென்றும்
எற்கண்ட பொழுதிருந்து ஏத்துபுகழ்
வீரகத்தி அருளின் வெள்ளம்
மற்றுமொரு நினைவதனை மனங்கொண்மோ
மதகரியே மலர்த்தாள் போற்றி! 20

ஆணவத்தின் அடித்தளமாய் ஆனபல
மாயைகளின் அரணே யாகிக்
காணவொரு பூதமதாய்க் கருணைநெறிக்
கெதிரான கயவ னாகிப்
பாணமதைத் தொடுத்தெறிந்த பாதகனைப்
படையெழுவால் பரிந்த ளித்து
நாணஅவன் பெருச்சாளி நாயகனும்
வீரகத்தி நலன்தாள் போற்றி! 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகன்ற ஞாலமெலாங் கசிந்துருகிக்
கதறியழக் காட்சி தந்தே
விண்ணவர்கள் தொழுதேத்த விழுப்பொருளாய்
வீரசக்தி வேடங் கொண்டாய்
பண்ணிலே பாவலர்தம் நாவினிலே
பழகுமுளப் பதுமந் தன்னில்
வெண்ணிலவின் வெளிச்சமதாய் வேண்டுவோர்க்கு
விருந்தாவாய் விழுத்தாள் போற்றி! 22

சிறைகொண்ட வண்டறையும் செழும்பதியின்
பாறைவளர் ஊற லாலே
நறையொழுகு சோலைகளின் நடுவினிலே
நாம்வணங்கும் வீர சக்தி
பிறைகொள்ளாப் பிஞ்ஞகனுய்ப் பேரின்பச்
சக்தியதாய்ப் பிரிவின் வேறுய்
முறைகொள்ள எழுந்தருளி முறைப்பாட்டைச்
செவிமடுப்பார் முகிழ்த்தாள் போற்றி! 23

வடக்கனம்மா வளம்படுத்தி வழங்குமொரு
பிரசாதம் வாய்க்கப் பெற்றால்
அடக்கமிலாப் பொறிவழியே அலைந்தோரை
அருள்வழியாற் றுப்ப டுத்தும்
தடமலர்த்தே ஞயினிக்குந் தகைமையினல்
வீரசக்தி தாளே யேந்தில்
கடந்திடவே கன்மவினைக் கடல்நீந்திக்
காணுமருட் கனித்தாள் போற்றி! 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூந்தோட்டம் அழித்தாரும் பூசுரரை
இகழ்ந்தாரும் புகழே மேய
தீந்தமிழர் செய்தெய்வச் சிலையுடைத்தா
ரும்சித்ரத் தேரில் தீயைக்
காந்மெனக் கடிதெறிந்த கயவருமே
வீரகத்தி கழல்கள் போற்றின்
ஏந்துவைநீ அபயகரம் எலியிவர்ந்த
எந்தெய்வத் தெழில்தாள் போற்றி! 25

சன்னுசிப் புளியருகே சாய்ந்தாடு
நாயகனே! சதுர்த்தி நாதா
பன்னுகப் பாயலானும் பதந்தொழாத
பாங்காலே பங்கம் பெற்றே
உன்னுகத் தொளியாலே உய்ந்தாரே
வீரகத்தி உண்மை கண்டோம்
என்னுகம் உன்னடியை ஏத்துதற்கே
அருள்வாய்பொன் எழில்தாள் போற்றி! 26

திருவருளே மேனியெனத் தியாணிப்பார்
அறிவதற்கே தித்திப் பாரே
இருசெவியும் வல்லபத்தின் இலச்சினையாய்
இலங்கிடவே எழிலார் ஞானப்
பெருவயிறே உலகடக்கும் பெட்டகமாய்ப்
பேரொளியின் பெருமை கொள்ள
கருவானாய் வீரகத்திக் கரிமுகவா
சக்தியொளிர் கழல்தாள் போற்றி! 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனூறு வருக்கையொடு தெவிட்டாத
செவ்விளநீர்ச் சோலை யூடே
கானூறு ஆறெனவே கழனிகளின்
வாய்க்காலில் கரும்பி னிக்கத்
தானூறு கூபந்நிறை தண்ணளிசேர்
அரசடியில் தானே தோன்றி
வானூறும் பெயலாக வழங்குமருள்
வீரகத்தி வளர்தாள் போற்றி! 28

இடக்கரத்தில் பாசமொடு இனியதொரு
மோதகமும் ஒடித்தெ டுத்தே
விடப்பட்ட கொம்புடனே அங்குசமும்
வலக்கையில் வாதே செய்ய
தொடர்ந்தோடு முயிரினத்தார் தூமணியைத்
துதித்தாடித் தொடர்ந்தே பாட
இடர்தீர்க்க வீரகத்தி இரங்கிநீ
எழுந்தருளும் இணைத்தாள் போற்றி! 29

முருகூரும் போதெடுத்துச் சிவன்பூசை
முடிக்கின்ற முறைமை காத்த
குருகுலத்தார் பூப்பெய்யக் குறைதீர்க்கும்
வீரகத்தி குலத்தின் தெய்வம்
தருநிறைந்த தலமதிலே தாயானுய்
கற்பகமாய்த் தலைய ளிப்பாய்
அருவமென உருவமென அருவுருவ
மெனஅருளும் அலர்தாள் போற்றி! 30

தேசிய நூலகப் பிரிவு
நகர நூலக சேவை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணினிலே புலனூறப் பாவிசைத்துப்
பரஞானப் பதமே தீண்டிக்
கண்ணிரண்டில் ஒற்றியிட்டால் கணபதிதன்
காட்சியினால் கருவம் நீக்கி
மண்ணதிலே வீரகத்தி மாயையுருப்
பெருவாழ்வின் மகிழ்வுஞ் சேர்த்து
எண்ணியன எண்ணியாங்கென் றெய்திடவே
எமக்கருளும் எழில்தாள் போற்றி! 31

பஞ்சக்கரப் பாலகனைப் பாலாட்டிப்
பழமூட்டிப் படையல் செய்து
நெஞ்சாம்மஞ் சத்திருத்தின் நீள்யானைக்
கஞ்சமலர்க் கரத்தான் தானே
தஞ்சமென வீரகத்தி தாள்பணிந்தே
தண்டனிட்டால் தடுத்தே இன்னல்
அஞ்சற்க வெனஅருளிச் சஞ்சலங்கள்
அகற்றிடுவான் அருட்தாள் போற்றி! 32

பொலியச்சீர் ஊரெழுவில் புகுந்தாயே
போதிமரத் தடியில் வீற்று
நலிகின்ற நெஞ்சமதில் நாட்டமுறு
குஞ்சரமே ஞானத் தேவே!
ஒலிகிளருஞ் சங்கொலியே! ஓங்கார
மாயன்றோ ஓர்ந்தே கொள்ள
மெலிகின்றேன் மெத்தவருள் மேவிடுவாய்
வீரகத்தி மென்தாள் போற்றி! 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழால் உனைப்பாடச் சேர்வினைகள்
களைந்தருளும் செல்வா நீயே
தந்தமுறு வதனமதன் தரிசனத்தைத்
தாராயோ தருமம் போற்ற
விந்தைபுரி வீரகத்தி வேதவொலி
விளங்கிடவே வேண்டி நின்றேன்
பந்தமறும் பரிசதனைப் பாவியெற்குப்
பாங்காக்கும் பைந்தாள் போற்றி! 34

அடியார்க்கே அருள்புரிய அரசடியில்
அரசோச்சும் அமர ரேறே
பிடியாகக் களிறுகப் பேரின்பப்
பொருளான பெருமான் இன்னும்
இடியாத என்னுசை இச்சையெல்லாம்
இமயமதாய் இயங்கு தையோ
கடிதழித்தே வீரகத்தி காத்தளிப்பாய்
கமலமலர்த் தாள்கள் போற்றி! 35

1284 c.c

KOHA JPL

வல்வினையின் விடுதலைக்காய் வரங்கள்பல
வாரிவிடும் வீர கத்தி
நல்வினையின் தலைப்பேற்றால் நாடுவரேல்
நால்வேத நாய கன்தாள்
தொல்வினைகள் தொலைத்தோட்டித் தூயவருள்
சுரந்தளிக்கும் தோற்றங் கொண்டே
பல்வினையார் பிறப்பழித்தே பக்தியுறக்
காத்தளிபங் கயத்தாள் போற்றி! 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியீழத் தமிழுலகில் தமிழர்நெறி
சைவமெனுந் தாகந் தீர்க்கச்
சனித்ததொரு முதலேட்டின் தாதைசர
வணமுத்துச் சாலும் அன்பன்
இனித்தவுனை வீரகத்தி இருத்தியன்றோ
'பானு' வதை எழுதிக் காட்டக்
கனிந்தபழச் சுவையதனின் கலம்பகமாய்க்
காண்குமருட் கனிதாள் போற்றி! 37

முக்கண்ணின் முதலான மூஷிகவா
கனஞான மூர்த்தி மூர்க்கத்
தக்கனையே சாய்த்திட்டுத் தாரணியில்
வீரகத்தி தருமங் காத்தாய்
எக்கணமுங் கட்டியமும் ஏழைக்காய்
எலியேறித் தீர்த்த மாடப்
பொக்கணைக்கே எழுந்தாயே புனிதாவுன்
போதான புகழ்த்தாள் போற்றி! 38

மால்கொண்ட சூரனையே மயக்கொழித்து
மாயவைக்க மருவி நின்று
வேல்கொண்ட குமரனவன் வேங்கையாய்
வளர்ந்தெழுந்து வள்ளி சேரக்
கால்கொண்டாய் வேழமதாய், களிப்பகையார்
தோள்சுமந்து கழலே வேண்ட
சூல்கொண்ட அருள்மழையாய்ச் சுழன்றனையே
வீரகத்தி சூழ்தாள் போற்றி! 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமிலான் எம்பெருமான் அருளாணைக்
கமைந்திட்டே அவனி யெல்லாங்
கந்தரவர் மயிலேறிக் கடிதோட
மதிதோய்ந்த கன்றே மெல்ல
சிந்தைதனில் புந்தியுறச் சிவனவனை
வலம்வந்து சிரித்தி நின்றே
எந்தையடி ஏத்துமுதல் ஏந்தல்நீ
வீரகத்தி எழில்தாள் போற்றி! 40

அன்பூறி அருள்வேண்டி அழுவிழுந்த
கண்ணீரே அருவி யாக
என்புருகப் புகழ்பாடி ஏழுலகும்
தொழுதேத்தும் இறைவா தெய்வ
மின்சிந்து கடைக்கண்ணின் மிகுவெள்ள
அருள்நோக்கால் மேவி நிற்பாய்
உன்பதந்தான் வீரகத்தி உனதடியார்க்(கு)
உறுதுணையே உயர்தாள் போற்றி! 41

அறுகாகப் படர்கின்ற அறிவுக்கண்
ஒட்டத்தின் ஆய்ந்தோர் பண்பை
மறுகாது பெரும்புலவர் மயில்வாக
ஞர்காலந் தொடவே வாழ்த்தி
குறுகான கொள்கையரை வீரகத்தி
குணங்காட்டிக் குட்டும் போட்டு
அறுகாலங் கைதொழுதே ஆனந்தக்
கூத்தாட்டும் அலர்தாள் போற்றி! 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனீன்ற ஆனைமுகா! அப்பனென
அன்னையென அபயந் தந்தே
உரமான உய்வழியை உவந்தளிக்கும்
வீரகத்தி உளமே பற்றக்
கரமைந்தும் திரிவிழியும் கரிமுகமும்
திருவுருவுங் கனிந்து காட்டி
வரந்தந்து வீடளிப்பாய் வல்லவைசேர்
வாதாபி வண்தாள் போற்றி! 43

கொடியேற்றம் வரமறைவல் குருசோம
சுந்தரனார் கொள்ளும் வேத
வடிவமைவார் கிரியைகளின் வரம்புநெறி
களித்திடுவோர் வாய்ப்புக் காகக்
கடிதெனவே கூடிடுவர் கரிமுகனார்
அடியாரே காத்தல் கொள்ளும்
பிடியுமைசேய் வீரகத்திப் பெருங்கருணைப்
பிழம்பேயுன் பொலன்தாள் போற்றி! 44

தேரோடும் வீரகத்தித் திருக்கோலம்
தெவிட்டாத தீஞ்சு வைத்தேன்
வாரோடுஞ் சிற்பமொடு வாராத
சிற்பமதாய் வைத்ய நாதர்
பாரோரும் மந்திரத்தைப் பண்பாக
உச்சரிக்கும் பான்மை யாலே
காரோடும் மழைக்கருணை கனிந்தொழுகு
கணபதியே கழல்தாள் போற்றி! 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறியக் கலைஞானங் கேட்டறிய
முத்தமிழைக் கண்டு கொள்ள
வற்ருத பாசமக்கள் பலனறிய
நாட்டுடே வளமே தேர
உற்பாத நெறிதம்மில் உய்வழிகள்
ஆய்ந்தறிய உவந்தா ருன்பூம்
பொற்பாதம் அறிந்தோமேல் புகலிடமே
வீரகத்தி பொற்ருள் போற்றி! 46

உன்னையல்லா தின்னொருத்தர் உணர்வுகொள
ஊரெழுவார் உரிமை கொள்ளார்
பின்னையேன் பித்தனெனப் பிதற்றுகின்றேன்
பிள்ளைசீர் தளைகள் ஈய்ந்து
பன்னுதமிழ்ப் பாவோதப் பதமெடுத்த
வீரகத்தி பக்கத் துள்ளான்
பொன்னொளிரும் மேனியனைப் போற்றிடுமே
புவனமெலாம் பொற்ருள் போற்றி! 47

கற்பகத்தைக் கரிமுகத்துக் கன்றினைப்பார்
காத்தளிக்கும் கமலக் கண்ணர்
உற்பவத்தை வழிப்படுத்தி யுவந்தழைத்தே
அபயமளி உலகத் தேவை
பொற்பதங்கள் தொழுமடியார் புகலெனவே
இருளகற்றிப் புன்மை போக்கும்
சிற்பரனே வீரகத்திச் சிவமுதலே
எமையாளும் செழுந்தாள் போற்றி! 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துயிர்க்குந் தாயாகி அடியார்க்கோர்
அடியானுய் ஆண்டு கொள்ள
வினைத்துயரின் வேரறுக்கும் வீரகத்தி
வேழமுக வேந்த னெந்தை
தினைத்துணையாம் அருட்தேனின் திவலையதே
தீராநோய் தீர்க்கு மன்றே
பனைத்துணையாங் கன்மவினைப் பவமழிப்பாய்
பாவியெற்கே பசுந்தாள் போற்றி! 49

பைந்தமிழிற் கரைகண்ட பண்டிதனூர்
முருகையர் படைப்புப் பல்கி
"செந்தமிழ்"சேர் பொன்னேட்டைச் செகமெல்லாம்
போற்றிடவே செழுமை செய்து
கந்தமுற மலர்காயாய்க் கனியாக
வீரகத்தி களித்துக் காண
அந்தமிலா அருவுருவாம் அறிவுருவாய்
அருளாயோ அலர்தாள் போற்றி! 50

முருகனுக்கு முன்பிறந்த முக்கண்ணு
முகுந்தனுக்கு முறையே பேசும்
மருகோனே உம்பரெலாம் மயல்தீர
மந்திரித்த மகவே யெங்கள்
இருளகல அருள்புரிந்தே யிடர்தீர்ப்பாய்
என்றென்றும் இகத்தில் நாமே
அருளாளுங் குடைக்கீழே அமர்ந்தாற
வீரகத்தி அலர்தாள் போற்றி! 51

தேசிய நூலகப் பிரிவு
நூலக சேவை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைமரங்கள் நிமிர்ந்தாடும் பசுமையுறு
காவருகே பயிலுஞ் செம்மைத்
தினையினங்கள் சாய்ந்தாடுந் திக்கெல்லாந்
தென்றலுறு திருநா மங்கள்
தனைமருந்தாய்ப் பருகியேநாம் தழைத்தோங்க
வருள்சுரந்து தருவா யப்பா
வினைமயக்கும் புன்மலத்தை வேகடிப்பாய்
வீரகத்தி விறல்தாள் போற்றி! 52

உனையன்றி யின்னொருத்தர் உதவியில்லை
உறுதுணையா யுவந்து வாழ
கனைகடலே சூழீழக் கதிரமலைக்
கதிபதியாங் கதிர வேலன்
பினையுடையாய் பேரொளியே! பெருமானே!
வீரகத்தி! பிறவித் துன்பம்
எனைக்கலைக்கா நெறிகாட்டி எழுபிறவி
தகர்ப்பாயே எழில்தாள் போற்றி! 53

வானூர்தித் துறைசேரும் வீதியிலே
வலங்கொள்ள வீர கத்தி
தேனூறுஞ் சோலையிலே தித்திக்க
வீற்றிருக்கும் தெய்வ மாகி
ஊனூறும் படைக்கலத்தா ருறுபயத்தை
உனதருளால் உதைத்துத் தள்ளி
வானூறுங் காராக வருள்பொழிந்தே
காத்தாய்நீ வண்தாள் போற்றி! 54

83491

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்க ருள்சுரந்து நல்லமுது
செய்தாயே நாளும் ஏத்த
இம்பர்க்கே யிருளகற்றி இரங்கினுயென்
இடர்தீர்க்க எழுந்தே வந்த
தும்பிக்கைச் சுடர்விளக்கே தூயதவக்
கொழுந்தேநீ தொழுவார்க் கெல்லாம்
நம்பிக்கை தந்தாயே நாம்வணங்கும்
வீரகத்தி நலன்தாள் போற்றி! 55

என்னன்பே மீதூர எழின்மலராய்
முப்பொழுதும் ஏத்தி உன்னைப்
பன்னுமொரு மொழியிலனுய்ப் பக்தியுடன்
எப்பொழுதும் பணிந்து நின்றேன்
உன்னருளைப் பெறுவதற்காய் இரவுபகல்
வீரகத்தி உளமே கொண்டு
மன்னியுனை முறையிட்டேன் மகிழ்ந்தளித்துக்
குறைதீர்த்தாய் மலர்த்தாள் போற்றி! 56

பாலியத்தில் பேதமையின் பரிதவிப்பால்
பிள்ளையார் பதமே நாடேம்
மாலிருண்ட காளையராய் மங்கையர்மேல்
விழிவைத்து மயங்கி நின்றேம்
வேலிரண்டு நெற்றியிலே விஞ்சியொரு
ஞானவிழி வீர கத்தி
காலிரண்டுஞ் சோரமுன்னே காட்டிடுதி
கண்முன்னே கழல்தாள் போற்றி! 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்க்குதவக் கங்கைநதி பொங்கிவழிந்
தோடுகின்ற பெருநீ ராக
பிறர்சுவைக்கும் கனியாகக் கரும்பாகப்
பொன்னாகப் பூக்க ளாகப்
பிறர்பருகப் பால்சுவைக்கும் பெற்றமுமாய்ப்
பரிந்தூட்டப் பிறந்தார் பிள்ளை
பிறப்பறுக்கும் வீரகத்தி பிடித்தோர்க்கே
உய்வளிக்கும் பொற்றாள் போற்றி! 58

துன்பம்வந் துறும்போது துணைநாட
அலையாது தோற்றம் தந்தே
என்பக்கம் நின்றருளி எனையாண்ட
வீரகத்தி எங்கே யேனும்
வன்பக்கம் அறிந்தாயேல் வழிமறித்துத்
திருப்புவாய்நீ வாழ விட்டே
என்பக்கம் ஒன்றில்லை எனவுணர்த்தி
ஏத்துமிணை எழிற்றாள் போற்றி! 59

புத்திதரும் போதகனைப் பூலோகக்
காவலனைப் பூசித் தாலே
மெத்தவருஞ் செல்வமெலாம் மேலான
சுகபோகம் மிகுமே ஞான
வித்தகனார் கடைக்கண்ணை வீசுமெனில்
வீரகத்தி வேட்கை கொண்டு
முத்திதரும் மூலோக ஆட்சிதரும்
முக்கண்ணன் முகிழ்தாள் போற்றி! 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரைந்து கரத்தாலே இகபரத்திற்
கபயமளி இயல்பே யோங்க
ஓரைந்து வதனமொடு ஓங்கார
ரூபமதாம் ஒளியு மோங்க
பேரைந்து புன்மலங்கள் பொடியாகப்
பறந்தோடு பேறு மோங்க
பாரைந்து துதித்தேத்தப் பரம்பொருளாய்
அருளாளும் பரன்தாள் போற்றி! 61

## வேறு

குடையோடு நாடிவருங் குடமுனிவன்
அருளேந்தக் குதித்துத் துள்ளி
நடையோடு 'நான்' ஓட நண்ணுகின்ற
போதெல்லாம் நம்பி நீயே
மடையோடு அருள்வெள்ளம் மலர்வதற்கே
அவர்வாயால் மடுக்க நின்பாய்
விடையோடு வந்துறுத்தும் பகைவரையே
அழித்தொழித்துப் பரந்தே காப்பாய். 62

வினைமூழ்கிப் பவக்கடலில் விழுந்தடித்துத்
தத்தளிக்கும் வீணன் என்னை
மனையாக மருத்துவனின் மருந்தாக
மலர்மேவு மகரந் தம்மாய்
நனையாது காக்கின்ற நற்குடையாய்
நலன்காத்தாய் நண்ணி வந்த
எனையேநீ வழிப்படுத்தி ஏற்றமுற
இணைத்தாயே ஏத்தக் காப்பாய். 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவஞ்செய்கேன் தக்கார்சொல் தன்கரும
மேசெய்கேன் தருக்கே ஏற
அவஞ்செய்தேன் நாளெல்லாம் அங்கிங்காய்
அலைந்தேனே அருளே கொள்ளாத்
துவஞ்செய்தேன் எனையாளுந் தூமணியே!
நவமான துதிக்கை பற்றுப்
பவஞ்செய்தேன் என்னுள்ளே பற்றிநிற்குஞ்
சிவங்காணேன் பதியே காப்பாய். 64

ஒருபோது நினைமறந்து ஒதுங்கிடவே
எனதுள்ளத் தொருமை காணேன்
இருபோது திருநாமம் இயம்பாதே
இருப்பேனேல் இன்னல் தீரா
வெருவாது முப்போதும் விரைகழலில்
வீழ்ந்தார்க்கு விடுதி காட்டும்
திருவான பொன்னுருவந் திகழ்ஞானக்
கணபதியே திருத்திக் காப்பாய். 65

திருவான பொன்னுருவந் திகழ்ஞானக்
கணபதியின் திருத்தாள் காணக்
கருவான கொடித்திரையைக் கண்குளிர
முதன்முதலாய்க் கடிதி லேற்றி
அருவான மலமெரிய ஆனைமுகன்
திருவருளே ஆகு மென்றோர்
குருவான சிவஞான மறைதொழுத
கோமளமே குட்டக் காப்பாய். 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சமுகப் பிள்ளையார்

சங்காரகக் கருவாகிச் சராசரத்திற்
    கருவூட்டச் சனித்த தாயாய்
பொங்குபுக ழாத்தியரன் புரமெரித்தான்
    பாகத்தாள் புவியில் தோன்ற
அங்கவளை யாட்கொள்ள ஆறோடு
    சடையானே அவனிக் காகப்
பங்கயத்தே அழகூரப் பஞ்சமுகப்
    பிளையான பரிவே போற்றி! 67

பார்கொண்டே பெற்றேத்தப் பரம்பொருளின்
    வரம்வேண்டப் பயின்ற பக்தன்
பேர்கொண்ட தார்மரீசி மாதவத்தான்
    மனங்குளிர மருந்தே யான
சீர்கொண்ட சிவகாம சுந்தரியைச்
    சிவனாரே செங்கை சேர்க்க
ஏர்கொண்ட பஞ்சமுகம் எழிலாரக்
    கரம்பத்தாய் எழுந்தாய் போற்றி! 68

சாந்தஞ்சேர் தற்பரமும் சதானந்த
    நித்தமொடு அகண்ட சுத்தம்
ஏந்துகுண மாறோடு எம்பெருமான்
    ஆகமத்தின் எழிலே வீற
காந்தமொளிர் வச்சிரமும் கரமதிலே
    தமருகமார் கட்கம் சூலம்
பாந்தளொடு அங்குசமும் மழுபாசம்
    வாள்மணிசேர் பிள்ளாய் போற்றி! 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சசக்தி ருத்திரயத்தின் பரிநாமம்
பாரெல்லாம் பணித்தே யொன்ற
கஞ்சத்து மாலயனு முருத்திரம
கேசனோடு சதாசி வஞ்சேர்
நெஞ்சத்தே நித்தநிதம் நினைந்தாடு
மடியார்கள் நெகிழ்ந்தே பாடப்
பஞ்சமுக மானுயே பரமசிவப்
பிள்ளையேயுன் பதமே போற்றி! 70

ஐந்துகர வீரசக்தி அருண்மழையில்
தோய்ந்தாடி அறவே ஐந்தும்
நைந்துருகி நாம்போற்று நலன்காக்க
நான்முகனே நாடு வேதன்
மைந்தரவர் அரசடியில் மயலறுக்க
மனமொன்றி மகிழ்வே துள்ள
ஐந்துமுகப் பிள்ளையாய் அருள்பொழிவார்
வல்லபையோர் ஆள்வாய் போற்றி! 71

முன்னின்றே காப்பாகி மும்மலமு
மறுத்தாளும் முதல்வ ஞக
மன்னியசீர் வல்லபையை மணங்கொள்ள
மயிலேறி மயக்கந் தீர்த்த
பன்னிருகைக் கதிர்வேலன் பாசமுறு
மூத்தோனே பகரில் நீயே
தொன்மைவி னையறுத்துத் தூயவழி
காட்டிடுவாய் துணையே போற்றி! 72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரணவப் பிள்ளாய் போற்றி!
பிங்கள பிள்ளாய் போற்றி!
சரவணன் அண்ணு போற்றி!
சதுர்த்தி நா யகனே போற்றி!
அரசடி நாதா போற்றி!
ஐங்கர மூர்த்தி போற்றி!
பரவுமூர் அருள்வாய் போற்றி!
பரமன்சேய் போற்றி! போற்றி!! 73

குஞ்சரக் குருவே போற்றி!
குமரேசன் முன்னே போற்றி!
நெஞ்சிலே நிறைவா போற்றி!
நிர்மலக் குன்றே போற்றி!
கெஞ்சுவோர்க் கருள்வாய் போற்றி!
கணேச மூர்த்தியே போற்றி!
பஞ்சமுகப் பிள்ளாய் போற்றி!
பரமசிவா போற்றி! போற்றி!! 74

போற்றியெம் இறைவா போற்றி!
பொற்கரப் புனிதா போற்றி!
போற்றியெம் பிரானே போற்றி!
புண்ணிய அறிவே போற்றி!
போற்றியுன் திருத்தாள் போற்றி!
புகலிடம் அளித்தாய் போற்றி!
போற்றியெம் ஊரெழு வூர்ப்
பிள்ளையே போற்றி! போற்றி!! 75

சுபம்.

விநாயகன் திருவடிகளே சரண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்

செய்யுள்—19: வேதையர் - வேதாரணிய ஐயர், வீரகத்தி ஆலயத்தின் ஆரம்பகாலப் பூசகர்.

செய்யுள்—20: கார்த்திகேசர் - வேதையரின் புத்திரன்.

செய்யுள்—24: வடக்கனம்மா - கார்த்திகேசையர் மனைவி.

செய்யுள்—26: சன்னுசிப்புளி - சன்னுசிமார் தங்கிச் சிவ வேடங்கொண்ட நிழல்மரம்.

செய்யுள்—37: பானு-சைவ உதயபானு என்ற சைவத்தமிழ் ஏடு. இதன் ஆசிரியர் ஊரெழு சரவண முத்துப் புலவர்.

செய்யுள்—38: பொக்கணை - சிறிய வற்ரு நீரூற்று.

செய்யுள்—42: மயில்வாகனர் - சரவணமுத்துப் புலவரின் ஆசிரியரான கதிர்காம ஐயரின் ஆசிரியர், ஊரெழுவில் வாழ்ந்தவர்.

செய்யுள்—44: சோமசுந்தரனுர் - ச. சோமசுந்தரக் குருக்கள் (பெரிய குருக்கள்)

செய்யுள்—45: வைத்தியநாதர் - யா, வைத்தியநாதக் குருக்கள்.

செய்யுள்—50: முருகையர் - சீ. முருகேசையர் (தமிழறிஞர்)

செய்யுள்—62: குடமுனி - சீவன்முத்தர் கந்தையாச் சாமியார் (குடைச்சாமியார்)

செய்யுள்—66: சிவஞானமறை - (சிவஞானக் குருக்கள் முதன்முதலாகக் கொடியேற்றத் திருவிழா நடாத்தியவர், ஊரெழு குருகுலத்தைச் சேர்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## முழக்குக சிறுபறையே

சழக்குப் படுசில பேய்கள் மடிந்தவா
சரிகுடர் வலைதாங்கித்
தடவுத் தோற்பல கைத்தொகை யாவும்
தளைதரு தெப்பமெனப்
பழக்கித் திரையெறி குருதிச் செக்கர்ப்
பரவைப் பூம்புனலுள்
படர்ந்து நெடுந்திசை மூளை வழும்புகள்
பற்றி விருந்தயர
உழக்கிக் கடல்படு படைகள் அனைத்தும்
உடைந்து பிதிர்ந்தலற
ஒன்னலர் சென்னி உருட்டிக் கயமுகன்
உரமிரு பிளவுசெய்து
முழக்குற் றிடுவிறல் மாமுர சாள
முழக்குக சிறுபறையே
முற்படு கலைசையில் உற்பல வேழம்!
முழக்குக சிறுபறையே.

— செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

KOHA JPL
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
12840
83491

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரமலை'

வெளியீடு — 3

KATHIRAMALAI
URELU,
CHUNNAKAM,
SRI LANKA.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org